திருப்பெரும்புதூர் நகராட்சி ஆணையாளரின் செயலாணைகள்

முன்னிலை - திருமதி.பி.சி.ஹேமலதா,எம்.இ.,

க.உ.எண். 03/2025-2026 நாள் – 11.07.2025

ப.மு.எண்: 1065/2025 எப்1

பொருள்- கட்டட அனுமதி – திருப்பெரும்புதூர் நகராட்சிக்குட்பட்ட சர்வே எண். 1288/2(பகுதி), 1314/1(பகுதி), 1314/2(பகுதி), புதிய சர்வே எண்.1288/2A(பகுதி), 1314/1A1(பகுதி) & 1314/2A1(பகுதி), மனை எண்.1,2,17,18 & 19 ஸ்டில்ட், தரை தளம், முதல் தளம், இரண்டாம் தளம், மூன்றாம் தளம், நான்காம் தளம் மற்றும் ஐந்தாம் தளம் அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் கட்டுவதற்கு கட்டட அனுமதி வழங்கி உத்தரவிடுதல் - சார்ந்து.

பார்வை- 1) நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ) காஞ்சிபுரம் மாவட்டம் அவர்களின் கடித எண்.SWP/BPA/0373969/2024 நாள்.19.05.2025

2) திருவாளர்கள்.Lanchor Holdings Limited என்பவர்களின் விண்ணப்ப நாள்.05.06.2025.

உத்தரவு

திருவாளர்கள்.Lanchor Holdings Limited என்பவர்களின் திருப்பெரும்புதூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே எண். 1288/2(பகுதி), 1314/1(பகுதி), 1314/2(பகுதி), புதிய சர்வே எண்.1288/2A(பகுதி), 1314/1A1(பகுதி) & 1314/2A1(பகுதி), மனை எண்.1,2,17,18 & 19-ல் ஸ்டில்ட், தரை தளம், முதல் தளம், இரண்டாம் தளம், மூன்றாம் தளம், நான்காம் தளம் மற்றும் ஐந்தாம் தளம் அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் கட்டுவதற்கு பார்வை 1ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின்படி தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.

இந்த அனுமதியானது 11.07.2025 முதல் 10.07.2031 தேதி வரை ஐந்து வருட காலத்திற்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், கீழ்காணும் விவரப்படி கட்டணங்கள் வசூலிக்கப்பட்டுள்ளன.

வ.எண்	விவரம்	தொகை ரூ	ரசீது எண்/நாள்
1	கட்டிட அனுமதி கட்டணம்	37,07,500/-	194/11.07.2025
2	மழைநீர் சேமிப்பு கட்டணம்	2,20,000/-	194/11.07.2025
3	ஆய்வு கட்டணம்	10,000/-	194/11.07.2025
4	கூர்ந்தாய்வு கட்டணம்	5,000/-	194/11.07.2025
5	கட்டிட தொழிலாளர் நலநிதிக் கட்டணம்	24,53,500/-	194/11.07.2025

6	கொடி நாள்	1,02,000/-	194/11.07.2025
7	குடிநீர் வைப்புத்தொகை	8,25,000/-	194/11.07.2025
8	பாதாள சாக்கடை வைப்புத்தொகை	8,25,000/-	194/11.07.2025
9	நிலஉபயோக மாற்ற கட்டணம்	9,30,000/-	194/11.07.2025
10	காலியட வரி	2,53,053/-	193/11.07.2025
மொத்தம்		93,31,053/-	

நிபந்தனைகள்

1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் கடித எண்.SWP/BPA/0373969/2024 நாள்.19.05.2025-ன்படி தொழில்நுட்ப அனுமதியில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு கட்டிடம் கட்டப்பட வேண்டும்.
2. கட்டிடத்தின் பக்க இடைவெளிகள் மற்றும் திறவிடங்கள் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு விடப்பட்டிருக்க வேண்டும்.
3. அரசாங்கத்திற்குச் சொந்தமான இடங்களிலோ அல்லது இம்மனுதாரருக்கு சம்மந்தமில்லாத வேறு இடங்களில் ஆக்கிரமணம் செய்வது கூடாது.
4. கட்டட வேலைகள் நடக்கும் பொழுதோ அல்லது வேறு எந்த நேரங்களிலோ நகராட்சியிலிருந்து ஆய்வு செய்ய வரும் அதிகாரிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களை காண்பிக்க வசதியாக வேலை நடக்குமிடங்களில் மேற்படி வரைபடங்களை வைத்திருத்தல் வேண்டும்.
5. இந்த உத்திரவில் அனுமதிக்கப்பட்ட சாலவரையரைக்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்படாவிடில் மீண்டும் கட்டிட அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.
6. அனுமதித்த வரைபடத்தில் அல்லது மாறுதல் ஏதேனும் செய்து கட்ட வேண்டுமானால் அதற்குரிய திருத்தப்பட்ட வரைபடங்களுடன் ஆணையாளருக்கு விண்ணப்பம் செய்து திருத்திய வரைபடம் அனுமதி பெற்ற பின்பு தான் கட்டிடம் கட்டப்பட வேண்டும்.
7. கட்டிடம் கட்ட உத்திரவு பொய் பதிவுகள் மூலம் பெற்றதாகவோ அல்லது ஏதேனும் கட்டிட விதிகளுக்கு புறம்பாகவோ பெற்றதாயிருந்ததால் மேற்படி உத்திரவை ரத்து செய்ய நிர்வாக அலுவலருக்கு உரிமை உண்டு.
8. Solar WaterHeating System அமைக்கப்படல் வேண்டும்.
9. கட்டட வேலை முடித்த பின்போ அல்லது குடியேறிய பின்னரோ 15 தினங்களுக்குள்ளாக நிர்வாக அலுவலருக்கு எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும்.
10. கட்டிடத்தின் உயரம் 9 மீட்டருக்கு மேல் இருத்தல் கூடாது.
11. கட்டிடத்தின் மேற்பரப்பில் வீணாக செல்லும் மழைநீர் சேமிக்கும் வகையில் அல்லது குழாய்கள் மூலம் வடிகட்டி கிணற்றில் சேமிக்கும் வகையில் உரிய ஏற்பாடுகள் கண்டிப்பாக செய்ய வேண்டும்.
12. கட்டிட உரிமையாளர்கள், ஆழ்துளை கிணறுகள் அமைக்கும் போது உரிய அறிவிப்பு பலகைகள், தடுப்பு வேலிகள் மற்றும் விளம்பர பலகைகள் அமைப்பத்தும், பாதுகாப்பு மூடி அமைக்கப்பட வேண்டும்

13. கட்டட அனுமதி வழங்கியதில் தவறுகள் ஏதேனும் பின்னர் தெரியவந்தால், கண்டறியப்பட்டால் வரைபட உரிமம் இரத்து செய்யப்படும்.

இணைப்பு - அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் மூன்று நகல்

11.7.2025

ஆணையாளர்

திருப்பெரும்புதூர் நகராட்சி

பெறுநர்

11.07.2025

திருவாளர்கள்.Lancor Holdings Limited, VTN Square, 2nd Floor, No.58, (Old No.104) GN Chetty Road, T.Nagar, Chennai – 600 017